புதுமலர்: 21 இதழ்: 01 தை - மாசி

# அனல்

01.01.2024

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



## மீட்பின் ஆண்டு – 2024
## Year of Redemption

**கர்த்தர்
உன்னை
உன் சத்துருக்களின்
கைக்கு நீங்கலாக்கி
மீட்பார்.**
மீகா 4:10

**The LORD shall redeem thee from the hand of thine enemies.
Micah 4:10**

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்கின்ற சாட்சியாக வாழ் நீ 2024இல்...

வைப்பார் பிரியம் பணத்தில் மனிதர்
இருப்பர் பிரியனாய் தனக்கே மனிதர்
இல்லை அன்புச் சுபாவம் மனதில்
இம்மியும் இல்லை இச்சை யடக்கம் வாழ்வில்
பகைப்பர் நல்லோரை தன்னில்
இருப்பர் கொடுமையாய் பாரினில் அன்றும்

இறுமாப்பும் துணிகரமும் இணைந்து செல்ல
துரோகியாய் தூஷிப்பும் வீம்பும் பேசி
பரிசுத்தம் தொலைத்து நன்றியறிவின்றி
இவ்வாழ்வே சிறப்பென நினைந்து

தரிப்பர் தேவபக்தியின் வேஷத்தை வெளியில்
மறுப்பர் தெய்வ பெலத்தை உள்ளில்
இருப்பர் சுகபோகமாய் வாழ்வில்
கெடுப்பர் தம் ஆவிக்குரிய ஜீவியத்தை மறைவில்

விசுவாசம் குறைகிறது அன்பு தணிகிறது
வறுமை வாட்டுகிறது வெள்ளம் பெருகுகிறது
அக்கினியால் அழிவுகள் புயல்களின் பூதாகரங்கள்
வானத்தில் அடையாளங்கள் பூமியில் - கொடுமைகள்

இவைகள் எதன் அடையாளங்கள்
நாட்கள் கடைசி காலங்கள் கொடிது
நிறைவேற்றுவோம் தேவ சித்தம்
கடைப்பிடிப்போம் கர்த்தரின் விருப்பம்


காலம் கடைசி களைவோம் வேஷ கோலம்
புகுவோம் புத்தாண்டில் நியமானவர்களாய்
வீழ்ந்த கடைசிகால அடையாளமாக அல்ல நீ
ஜீவிக்கின்ற கிறிஸ்துவின் தூய்மையாளனாய்
வாழ்கின்ற சாட்சியாக நீ வாழ் 2024இல்...
இது கடைசிக் காலம்...

Ps. VM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கவிதை
03. கதையும் கற்றதும்
04. நற்செய்திப்பகுதி
05. சிறுவர் வட்டம்
06. குறுக்கெழுத்துப்போட்டி - 117
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. வினா விடை - 119
12. தனிமை இல்லையேல்



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**



**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

**உ**ன்னதமான தேவனுக்கு மகிமையுண்டாகட்டும்!

பிறந்திருக்கும் புத்தாண்டில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சி. கடந்த வருடம் முழுவதும் அனல் உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

சகல மகிமைக்கும் பாத்திரர் தேவன் ஒருவரே! இயேசு கூறினார்; **'நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை'** யோவான் 8:50 ஆனால் பிதாவை மகிமைப்படுத்தினார். யோவான் 12:28இல் இயேசு சொல்கிறார்: **'உமது நாமத்தை மகிமைப்படுத்தும்'.**

கர்த்தராகிய இயேசு உலகத்தில் மனிதனாய் இருந்த போது அவர் செய்த அற்புதங்கள் ஏராளம். மரித்தோரை உயிரோடு எழுப்பினார், கடலின் மேல் நடந்தார், எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களைக் குணமாக்கினார். ஒரு சில அப்பத்தையும், மீனையும் வைத்து ஆயிரக்கணக்கானவர்களைப் போஷித்தார். ஆனால் இவைகள் எதனாலும் தனக்கென மகிமையைத் தேடவில்லை. பிசாசுகள் பிடித்தவனை விடுதலை செய்துவிட்டும், நோயுள்ளவர்களை குணமாக்கிய பின்பும் ஒருவருக்கும் அதைச் சொல்ல வேண்டாம் என்றார். எமது முழு நோக்கமும் தேவனுடைய மகிமை. இயேசு கிறிஸ்து தேவனாய் இருந்தும் நாம் வாழ வேண்டிய முறையைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். தேவனுக்கு ஏற்றபடி வாழும்போது தேவன் ஒவ்வொருவரையும் மகிமைப்படுத்துவார். மனுஷரால் நாம் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என ஒரு போதும் நினைக்கக்கூடாது. யோவான் சொல்கிறார்: 'அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வரும் மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்'

தேவ கற்பனையை (பத்துக்கட்டளை) மீறி இயேசு மகிமையைப் பெறவிரும்பவில்லை.

மகிமையைப் பெற்றுக்கொள்வதற்காக தன்னுடைய உருவத்தை இயேசு பூமியில் வைத்துவிட்டும் செல்லவில்லை. தேவனை அவர் உள்ளபடியே நாம் அறிந்து கொள்வதை அவர் விரும்புகிறார். அவர் இருக்கிறவண்ணமாய் நாம் அனுபவிப்பதால் வரும் மகிமை உண்மையானது. தேவனாகிய இயேசு மனிதனாக வந்தார். அது உண்மை. ஆனால் இயேசு தன் தோற்றத்தைக் காண்பித்து கிறிஸ்தவத்தைக் கட்டவில்லை. மாறாக தன் வார்த்தையைக் கொண்டு கிறிஸ்தவத்தைக் கட்டினார், கட்டுகிறார். தன் சமாதானத்தை வைத்துவிட்டுப் போனார். தன் வார்த்தையைத் தந்துவிட்டுப்போனார். ஆனால் தன் தோற்றத்தையோ, தான் பூமியில் மனிதனாகப் பிறந்த அந்த நாளையோ அவர் மனிதனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிட்டுப்போகவில்லை. இவைகளால் தனக்கு வரும் மகிமையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பூமியில் வந்ததன் நோக்கத்தை மரண பரியந்தம் நிறைவேற்றி முடிப்பதனால் பிதா கொடுக்கும் மகிமைக்காக காத்திருந்தார். பிரசித்தம் அடைவதைவிட பிதாவின் சித்தம் செய்தலே மேலானது எனக் கண்டார்.

வேதம் சொல்கிறது: இயேசு மறுபடியும் வரும் போது பிதாவின் மகிமை பொருந்தியவராய் வருவார். (மத்தேயு 16:27, மாற்கு 8:38, லூக்கா 9:26) அவராய் இதைத்தேடவில்லை. ஆனால் அவர் அதற்குப் பாத்திரர்.

அன்பின் வாசகர்களே! வரும் காலங்கள் யாவும் தேவனுடைய மகிமைக்காக வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக மகிமை தேவனாலே கொடுக்கப்படும். ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாய் நாம் ஆவிக்குரியவர்கள் என்பதை கொஞ்சமாவது நினைத்துக் கொள்ளுங்கள். வரும் காலங்கள் தேவனுடைய மகிமைக்காக வாழுங்கள்.

அனல் சஞ்சிகை ஊழியம் கிட்டத்தட்ட 1980களில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வந்து கொண்டிருந்தது. அப்போது கர்த்தருக்குள் நித்திரையடைந்த போதகர் இன்பரூபன் அவர்கள் ஆசிரியராக கடமையாற்றி னார். நாட்டுச் சூழ்நிலை காரணமாக சஞ்சிகை வெளியிடுவது சில காலங்கள் நிறுத்தப்பட்டது. பின்னர் மீண்டும் 2004ஆம் அண்டு அனல் சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. இன்றுவரை தொடர்ச்சியாக அனல் சஞ்சிகை வெளிவர தேவன் கிருபை செய்துள்ளார். தேவனுடைய நாமம் மகிமைப்படவேண்டும்! ஜனங்கள் சத்தியத்தை அறிந்து விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கோடு இம்மட்டும் அனல் வெளிவந்திருக் கிறது. இனிமேலும் சத்தியத்தை அறிவிப்பதில் அனல் முன்னிற்க தேவன் உதவி செய்வராக. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்!!!

~ ஆசிரியர் ~

---




*எப்பொழுதும் கர்த்தருடைய சந்தோஷத்தில்*
*நிறைந்து தேவனுடன் உறவாடி,*
*கர்த்தருக்குப் பயப்படும் பயத்துடன்*
*சகல நன்மைகளும் பெற்று,*
*ஆவிக்குரிய உலைகப்பிரகாரமான சகல*
*ஆசீர்வாதங்களும் பெற்று,*
*ஆண்டவருக்கு சாட்சியாக வாழ*
*அனலின் வாழ்த்துக்கள்!* - ஆசிரியர் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## நன்மை செய்வதில் சோர்ந்து போகாதே

❒ வை. விமலதாஸ்

சிறியதொரு கிராமத்தில் அண்ணன் தம்பி இருவர் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் இருவரும் சிறு வயதிலிருந்தே ஒற்றுமையாக ஒரே நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென இவர்கள் இருவருக்கும் இடையிலே சிறியதொரு மனக்கசப்பு ஏற்பட்டது. கற்கோட்டை போன்று இறுக்கமாக இருந்த அவர்கள் உறவு சிறிய வார்த்தை தகராறினால் உடைந்து போனது.

ஒருநாள் ஒரு தச்சுத் தொழிலாளி மூத்த சகோதரன் வீட்டைத் தட்டி தனக்கு ஏதாவது வேலை கொடுக்குமாறு கேட்டார். அதற்கு அவன் தன்னுடைய வீட்டிற்கு பின்னால் கூட்டிச்சென்று அவனிடம் "இங்கே பாருங்கள் இங்கு ஓடுகின்ற வாய்க்காலுக்கு அந்தப் பக்கம் என்னுடைய தம்பியின் வீடு இருக்கின்றது. கடந்த கிழமை வரைக்கும் எங்கள் இருவருக்கும் நடுவில் புல்வெளியாக இருந்த இடம்தான் இது. என் தம்பி ஒரு புள்டோசர் எடுத்துச் சென்று கொஞ்சத் தூரத்திலிருக்கிற ஆற்று மதகை உடைத்து விட்டான். அதிலிருந்து புறப்பட்டு வருகின்ற தண்ணீர் இப்போது எங்களுக்கு நடுவில் வாய்க்காலாக ஓடுகின்றது. என் மீது இருக்கின்ற வெறுப்பினாலேயே என் தம்பி இவ்வாறு செய்திருக்கின்றான். எனக்கு அவன் இருக்கிற திசையை பார்க்கவே வெறுப்பாயிருக்கின்றது. நானும் அவனும் நிம்மதியாக இருப்பதற்கும் அவனை நான் பார்க்காமல் இருப்பதற்கும் நீங்கள் இந்த இடத்தில் எட்டு அடி உயரத்தில் மரத்தினால் ஒரு தடுப்பு சுவர் ஒன்றை கட்டியெழுப்புங்கள்' என்று கேட்டுக்கொண்டான்.

இதைக் கேட்ட தச்சுத்தொழிலாளி "எனக்கு உங்கள் நிலைமை புரிகின்றது. வேகமாக இந்த வேலையை நீங்களே நினைக்காத அளவுக்கு பிரமாண்டமான அளவுக்கு செய்து முடித்துக் கொடுக்கின்றேன் எனக் கூறி உடனே அவன் தன்னுடைய வேலையைச் செய்வதற்கு தொடங்கினான். மூத்த சகோதரனும் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னுடைய வேலைகளை சரியாக செய் என கூறிவிட்டு வேலையின் நிமித்தமாக வெளியில் சென்று விட்டான். அவன் தன் வேலைகளை முடித்துவிட்டு மாலையில் களைப்புடன் வீடு திரும்பினான்.

வீட்டுக்கு வந்த மூத்த சகோரனுக்கு பெரியதோர் ஆச்சரியம் காத்திருந்தது. அவன் தச்சுத்தொழிலாளிக்கு கூறிச்சென்ற வேலையை அவன் செய்யவில்லை. அங்கே அவன் எதிர்பார்த்து வந்த மரச்சுவர் கட்டப்படவில்லை. மாறாக அந்த வாய்க்காலுக்கு மேலாக அழகானதோர் மரப்பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. இதை பார்த்தவுடன் மூத்த சகோதரனுக்கு பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை. அவன் அமைதியோடு கூடிய மகிழ்ச்சியுடன் மெதுவாக அந்தப் பாலத்தில் ஏறிநடந்தான். எதிர்பக்கத்தில் இருந்து, 'அண்ணா' என்று சத்தமிட்டவாறு அவன் தம்பி அந்தப் பாலத்தின் மீது ஏறி ஓடிவந்து தன் அண்ணனை கட்டியணைத்து "அண்ணா என்னை மன்னித்துவிடு, நான் நம்முடைய உறவை பிரிக்க வேண்டும் என்பதற்காக அந்த ஆற்று மதகை உடைத்து வாய்க்காலை உருவாக்கினேன். ஆனால் நீயோ எங்களுடைய உறவு அறுந்து போகக்கூடாது என்று நினைத்து ஒரு பாலத்தை கட்டி இணைத்திருக்கின்றாய்" என கதறியழுதான்.

மூத்த சகோதரன் தச்சுத்தொழிலாளியைப் பார்த்து சாப்பிட்டுவிட்டு செல்லுமாறு கூறினான். அதற்கு அந்த தச்சுத்தொழிலாளி இல்லை நான் போகவேண்டும் இன்னும் இப்படி பல பாலங்களை கட்டவேண்டியிருக்கின்றது என கூறிவிட்டு சிரித்த முகத்துடனே விடைபெற்றான்.

ஆம் நண்பர்களே இன்று அநேகரின் வாழ்க்கைப் பயணமும் இப்படித்தான் காணப்படுகின்றது. மற்றவர்களுக்கிடையில் பிரிவுகள் வரும்போது அதைப் பார்த்து சந்தோஷப்படுபவர்களா நாங்கள்? அல்லது இந்தத் தச்சுத்தொழிலாளி போன்று பிரிந்திருக்கும் நபர்களுக்கிடையே இப்படிப்பட்ட பாலங்களைக் கட்டுபவர்களா? அறுந்துபோன உறவுகளை இணைக்கின்றோமா? இந்த புதிய வருடத்திலும் நாம் புதிய தீர்மானங்களை எடுப்போம். நாம் ஒவ்வொருவரும் நன்மை செய்வதில் சோர்ந்துபோகாமல் இருப்போம்.

**கலாத்தியர் 6:9 நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

பல கலைகளை உலகிற்கு முதலில் அறிமுகப்படுத்திய பிள்ளைகளின் தகப்பனோ தவறான பழக்கத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தி முற்பிதாவின் தவறையும் பின்பற்றினான். அவன் யார்? அவன் அறிமுகப்படுத்திய, பின்பற்றிய தவறுகள் என்ன?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2023 கார்த்திகை - மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

ஆரோனின் கோல் **(எண்ணாகமம் 17:1-8)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கத்திலே நெருங்குவோம் நேசரிடம்...



❒ பர்னபா




**கி**றிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலினூடாக இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

கடந்த 2023ஆம் ஆண்டு முழுவதும் எம்மை தேவன் கிருபை கூர்ந்து நடத்தினார். இந்த 2024ஆம் ஆண்டுக்குள்ளாக பிரவேசிக்கின்ற நம் ஒவ்வொருவருக்கும் தொடர்ந்தும் தேவன் கிருபை பாராட்டுவாராக.

கர்த்தருடைய வார்த்தை சொல்கின்றது: **நீதிமொழிகள் 27:1 ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே.** நாம் யாருமே நாளைய நாளுக்கு சொந்தக்காரர்கள் அல்ல. நாளைய நாளிலே என்ன சம்பவிக்கும் என்பதையும் அறிந்தவர்கள் அல்ல.

ஆனாலும் எல்லாம் வல்ல தேவன் எமக்கு ஓர் ஆண்டையே கூட்டித்தந்து கூடவே அந்தந்த நாளுக்கு வேண்டிய கிருபையையும் ஈந்தருளப் போகும் அவருடைய பெரிதான தயவை நினைத்து அவரை ஸ்தோத்திரிப்போம். அல்லேலூயா...

**சங்கீதம் 18:6 எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன்; தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய், அவர் செவிகளில் ஏறிற்று.**

இதே வசனத்தை நாம் **IIசாமுவேல் 22:7**இலும் வாசிக்கலாம். இவ் இரண்டு இடங்களிலும் சங்கீதம் ஒன்றே. தேவனுடைய மனுஷன் தாவீதின் வாழ்க்கையிலே ஆரம்பம் முதல் வாழ்வின் முடிவு வரையும் தொடர்ச்சியான நெருக்கத்தையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போராட்டத்தையும் வேதனைகளையும் மன மடிவையும் பார்க்க முடியும்.**

ஆனாலும் எல்லாவித நெருக்க மான சூழ்நிலைமைகளிலும் தாவீது கர்த்தரிடம் நெருங்குவதை நாம் பார்க்க முடியும். நெருக்கமும் போராட்டமும் இல்லாத வாழ்க்கை யாருக்குமே இல்லை. ஆனாலும் கேள்வி என்ன வென்றால், **'இந்த நெருக்கங்கள் எம்மை தேவனிடம் நெருங்கப் பண்ணுகிறதா?'** என்பதே.

இது நாம் அனைவரும் எம்மை பார்த்து கேட்க வேண்டிய கேள்வியாகவுள்ளது.

கிறிஸ்தவ வாழ்க்கையிலே நாம் பலவிதமான நெருக்கடிகளுக் கூடாக கடந்து செல்கின்றோம். சிலருக்கு குடும்ப வாழ்க்கை நெருக்க மானதாக அதாவது, கணவன் மூலமாக அல்லது மனைவி மூலமாக அல்லது பெற்றோருக்கு பிள்ளைகள் மூலமாக அல்லது பிள்ளைகளுக்கு பெற்றோர் மூலமானதாக நெருக்கடிகள் இருக்க லாம்.

சிலருக்கு கடன் பிரச்சினை அல்லது பொருளாதார (தொழில்) நெருக்கடி, பிள்ளைகள் வாழ்க்கைப் படாததினாலே, வேலை இல்லாமை யினாலே, குழந்தை பாக்கியம் இல்லா மையினால், வியாதியினாலே, நேசித்த வர்களாலே, உதவி செய்யச் சென்ற தினாலே, கிறிஸ்துவை ஏற்றுக்கொண் டதினாலே... இப்படியாக பலவிதமான நெருக்கடிகளுக்கூடாக நாம் கடந்து சென்றாலும் இவைகளின் மத்தியில் நாம் சோர்ந்து போய் அங்கும் இங்கு மாக அலைந்து ஆறுதல் தேடி தேவனைவிட்டு தூரமாக நிற்கின் றோமா? என்பதை நிதானித்துப் பார்ப்போம்.

நாம் மனந்திரும்பும்படியாக நம்மை நெருக்குகின்றார்.

**எண்ணாகமம் 22:25 கழுதை கர்த்தருடைய தூதனைக்கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி, பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று; திரும்பவும் அதை அடித்தான்.**

இந்த தீர்க்கதரிசியை இஸ்ர வேல் ஜனங்களை சபிக்கப்போகாதபடி தேவன் தடுக்கின்றார். தேவனுடைய இருதயத்தைப் புரிந்து கொள்ளாத இம் மனிதன் பிழையான இடம் நோக்கி இருதயத்தில் பொருளாசையோடு பிரயாணப்படுகின்றான்.

தேவன் இவன் மேல் வைத்த தயவினாலே தடுக்கும்படியாக கழுதை யைப் பயன்படுத்துகிறார். கழுதை பிலேயாமின் காலை சுவரோடு சேர்த்து நெருக்கிற்று. பிலேயாம் கழுதையை அடித்தான்.

பிரியமானவர்களே, பல வேளைகளிலே தேவன் எம்மையும் சில அசுத்தங்களுக்குள்ளே, இச்சை களுக்குள்ளே, பாவ காரியங்களுக் குள்ளே அகப்படாமலிருக்க சில நெருக்கங்களை அனுமதிக்கிறார். நாம் அந்த நெருக்கங்கள் எதற்காக என்று உணர்ந்து மனந்திரும்ப முயற்சித்திருக்கிறோமா? அல்லது எனக்கு நெருக்கம் வந்த வழிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து பிரச்சினைபட்டிருக்கிறோமா? பிலேயாம் மனந்திரும்பும்படியாக தேவன் பயன்படுத்திய நெருக்கத்தை உணரமுடியாமல் போய்விட்டான்.

இறுதியிலே பட்டயத்தினால் மடிந்து போனான். நியாயாதிபதிகளின் காலத்திலும் இஸ்ரவேல் ஜனங்களை மனந்திரும்பப் பண்ணும்படியாக தேவன் பல வியாதிகளை கொண்டு இஸ்ரவேலரை நெருக்கினார். உணர்ந்து மனந்திரும்பிய வேளைகளில் தேவனால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு நீங்களும் உங்கள் வாழ்க்கையில் கர்த்தர் அனுமதிக்கும் சில நெருக்கங்களை குறித்து உணர்வற்றுப்போய் இருக்கின்றீர்களா? தேவன் உங்களை நேசிப்பதால் நெருக்குகின்றார். சில தீமைகளை அனுமதிக்கின்றார். சில விரோதிகளை எழுப்புகின்றார். எனவே மனந்திரும்புங்கள்.

**சங்கீதம் 139:5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.** இது நாம் தேவனண்டை நெருங்குவதற்கான நெருக்கம். தேவமனுஷன் தாவீது பாடு கின்றார்; தேவன் என்னை முன் பக்கமாகவும் நெருக்குகின்றார், பின் பக்கமாகவும் நெருக்குகின்றார்.

பிரியமானவர்களே, நீங்களும் ஒருவேளை யோசிக்கலாம்: எனக்கும் எல்லா பக்கமும் பிரச்சினையாக இருக்கின்றதே இது எதற்காக என்று?

அன்பானவர்களே நீங்கள் தேவனண்டை இன்னும் மேலே நெருங்கி வரும்படியாகவே தேவன் உங்களை எல்லாப்பக்கமும் நெருக்கு கின்றார். பவுல் சொல்கின்றார்: 'பாடுகள் பெருகப்பெருக கிறிஸ்துவின் கிருபையும் பெருகுகின்றது' என்பதாக.

இன்னும் வேதாகமத்தை அதிகமாக வாசிக்க, இன்னும் தேவ சமூகத்தில் அதிக நேரம் விழுந்து கிடக்க தேவன் சிலவேளை எம்மை எல்லா பக்கமும் நெருக்குவார். இந்த அறிவு மிகுந்த ஆச்சரிய மானது. எம்முடைய வாழ்க்கையில் எமக்கு வருகின்ற நெருக்கங்களின் மூலமாக தேவன் நெருங்கப்பண்ணு கிறாரா? அல்லது மகிமைப்படு கின்றாரா?

பிரியமானவர்களே, ஆண்டுகள் புதிதானாலும் நெருக்கம் நிறைந்த வாழ்க்கை தொடர்ச்சியானதே. எனவே எம்முடைய வாழ்க்கையில் எமக்கு வரும் நெருங்கங்கள் எம்மை மனந்திரும்புதலுக்கு நேராக நடத்தட்டும். தேவனோடு நெருங்கி சேருவதற்கு ஏதுவாக அமையட்டும்.

மற்றப்படி எம் வாழ்க்கையில் உண்டாகும் சகல நெருக்கடிகளையும் நம் தேவன் அந்தந்த வேளைக்கு ஏற்ற பிரகாரமாக எம்மை பாதுகாத்து, இரட்சித்து, விடுவித்து நடத்த போதுமானவராக இருக்கின்றார்.

நெருக்கடிகளை பிரயோஜனமுள்ளதாக மாற்றுங்கள். இந்த ஆண்டிலே தேவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவின் காலடிகள்

❑ ஜசிந்தா அக்கா




இயேசப்பாவின் செல்லப்பிள்ளைகளே புதிய வருடத்திற்குள் வந்திருக்கிற உங்களுக்கு இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

சுகமாய் இருந்தீர்களா? இயேசு அப்பாவிற்கு பிரியமாய் நடந்தீர்களா? பிள்ளைகளே, இயேசு உங்கள் மேல் பிரியமாய் இருக்கிறார்.

காலை நேரம் நித்திரையால் கண் விழித்த சிறுவன் அப்பா... அப்பா... என்று கூப்பிட்டான். பதில் இல்லை. தன் படுக்கையை விட்டு எழுந்து வீட்டின் எல்லா இடங்களிலும் கூப்பிட்டுப் பார்த்தான், அப்பாவைக் காணவில்லை. வீட்டிற்கு வெளியே வந்து பார்த்த பொழுது மழை பெய்திருப்பதையும் அதிலே காலடிகள் இருப்பதையும் கண்டு அந்தக் காலடிகளில் தன் கால்களை வைத்து 'அப்பாவின் காலடி... அப்பாவின் காலடி...' என்று சொல்லிக் கொண்டே நடந்தான். அப்பாவின் காலடிகள் கள்ளுத் தவறணையில் வந்து நின்றது.

தம்பி, தங்கையரே சென்ற ஆண்டெல்லாம் தெரிந்தோ, தெரியாமலோ உங்கள் காலடிகள் யாரைப் பின்பற்றியது? எந்த இடமெல்லாம் சென்றது? சிந்தியுங்கள். ஒவ்வொரு நாளும் காலை நேரம் வேத வசனத்தை வாசித்து 'இயேசு அப்பா' என்று அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்களுக்குத் தென்படுவார். அவரோடு பேசுங்கள். அந்த நாளுக்கான வேத வசனத்தின் வெளிச்சத்திலே உங்கள் காலடியை வைத்து நடவுங்கள். கவனமாகவும் நல்ல பிள்ளைகளாகவும் இருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாளுக்கான வேத வசனத்தைக் காட்டி அதன் வெளிச்சத்திலே காலடியை எடுத்து வைக்க இயேசு சுவாமி உங்களுக்கு உதவி செய்வார். இவ்வாறாக ஒவ்வொரு காலடியை வைத்து நீங்கள் நடக்கும் பொழுது பரலோகம் போய் சேருவீர்கள். அங்கு இயேசு இருப்பார். அது அளவில்லா மகிழ்ச்சியல்லவா?

பிழையான வழியில் காலடி வைத்து நடந்து வருவீர்களானால் நரகலோகம் போய் சேர வேண்டி இருக்கும். அங்கு பிசாசு இருப்பான். அது மிகவும் பயங்கரமும் அழுகையுமல்லவா? உங்களுக்கு யார் வேண்டும்? எந்தக் காலடியைத் தெரிந்து கொள்ளப் போகின்றீர்கள்?

பிள்ளைகளே உங்களை அழைத்துச் செல்ல இயேசு சீக்கிரம் வருகிறார். அவரோடு செல்ல ஆயத்தமாகுங்கள்.

**சங்கீதம் 119:105 உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**

---

## வினா விடை - 119

01. நன்மை செய்கிறவராகச் சுற்றித்திரிந்தவர் யார்?
02. எருசலேமின் மூலைக்கு மூலை அந்நிய தெய்வங்களுக்கு பலிபீடங்களைக் கட்டினவன் யார்?
03. கர்த்தருடைய கட்டளையால் தன் மகனை பலி செலுத்தத் துணிந்த தீர்க்கதரிசி யார்?
04. இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் என்றது யார்?
05. 'கர்த்தருடைய ஆவியானவரின் வசனம் என்னுடைய நாவில் இருந்தது' என்று சொன்னவர் யார்?
06. முதலாவது கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டினவன் யார்?
07. குற்றமில்லா இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தவன் யார்?
08. சிங்கங்களைப் பார்க்கிலும் பலமுள்ளவர்களாயிருந்தவர்கள் யார்? யார்?
09. சத்திய ஆவி, நல்ல ஆவி, பரிசுத்த தேவர்களின் ஆவி முதலிய ஆவிகளைக் குறித்து எங்கே எழுதியிருக்கிறது?
10. 'ஆணையிட்டு பிரமாணம் பண்ணினார்கள்' எந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு செய்தார்கள்?

---



**சரியான விடை எழுதியவர்களில் பராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**

**வினாவிடை - 116**
**க.தமிழோவியன்**
**(தர்மபுரம்)**

**குறுக்கெழுத்துப் போட்டி - 116**
**எஸ்.திஸ்பியா**
**(யாழ்ப்பாணம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | | | | |
| | | | | | | | | 03 |
| | 04 | | 05 | | | | | |
| | | | | | 06 | | | |
| | | | | | | | 07 | |
| | | 10 | | | 09 | | 08 | |
| | | 11 | | | | | | |
| | | | 12 | | | | | |
| | | | | | | | | 13 |

## குறுக்கெழுத்துப் போட்டி 117

**இடமிருந்து வலமாக**

02. 800 பேர்கள் மேல் விழுந்து அவர்களை ஒருமிக்க வெட்டியவன்
05. தன் கை, பட்டயத்தோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் பெலிஸ்தரை வெட்டியவன்
06. ஆசேர் கோத்திரத்திலிருந்து கானானை சுற்றிப்பார்க்க அனுப்பப்பட்டவன்
11. விசுவாசத்தினாலே இவன் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்
12. தான் இருக்கிற ராஜ அரமனையைத் தீக்கொளுத்தி அதிலே செத்தவன்

**வலமிருந்து இடமாக**

03. இவன் தியானாளின் கோவிலைப் போல வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்தான்
07. 'நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் ........ செய்வேன்'
09. ஆமானின் தந்தை
12. இந்த பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது
13. நெகேமியாவையும் அலங்கம் கட்டுகிறவர்களையும் பரியாசம் பண்ணி நிந்தித்தவர்களில் ஒருவன்

**மேலிருந்து கீழாக**

01. கர்த்தர் இஸ்ரவேலரை இவன் கையில் விற்றுப்போட்டார்
04. மோசேயின் அம்மா
08. கேதுரு மரங்களை இவன் காட்டத்தி மரங்களைப் போல அதிகமாக்கினான்

**கீழிருந்து மேலாக**

10. என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் பேரில் ஆணையிடக் கேட்டவன்
13. அம்மோன் புத்திரர் முற்காலத்தில் தங்கள் தேசத்தில் குடியிருந்த இராட்சதர்களை இவ்வாறு அழைத்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் வை.தேவதாஸ்




அனைவருக்கும் சமாதானம்! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்று போன ஆண்டிலும் எபனேசராகிய நம் தேவன் நம்முடன் கூட இருந்து நடத்தினார். எவ்வளவோ வேதனைகள், நெருக்கடிகள் மத்தியிலும் தேவன் நம்மைக் கைவிடாமல் காத்துவந்தார். தேவன் எமக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ள வராக இருந்து வந்தார். அவருக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள் உண்டாவதாக.

இப் புதிய ஆண்டிலும் தேவனுடைய வார்த்தையில் இருந்து சில காரியங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். ஜெபத்துடன் வாசியுங்கள்.

**சங்கீதம் 91:14-15 (14.) அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். 15. அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய் வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.**

தேவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுக்கும் அருமையான வாக்குத்தத்தங்களை இங்கே காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய வார்த்தைகள் ஆம் என்றும் ஆமென் என்றும் உள்ளது. எனவே பிரியமான வாசகர்களே! இவ் வசனங்களில் தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தம் எனக்குத்தான் என்று விசுவாசித்து தொடர்ந்து தேவ செய்தியை வாசியுங்கள். இங்கே தேவன் எமக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளை முதலாவதாக தியானிப்போம்.

# 01. விடுவிக்கும் தேவன்

**சங்கீதம் 91:14a அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்;** ஆம் பிரியமான தேவ ஜனங்களே அவர் நம்மை எல்லா உபத்திரவங்களிலும் இருந்து விடுவிக்கிற தேவனாக இருக்கிறார். வேதாகமத்தில் யோசேப்பு என்கின்ற வாலிபனைக் குறித்து காண்கிறோம். கூடப்பிறந்த சகோதரர்களின் பொறாமைக்குட்பட்டு வெறுக்கப்பட்ட நிலையில் அவர் இருந்தார்.

யோசேப்பை அவர்கள் குழியில் போட்ட போது அவர் எவ்வளவாக கதறியிருப்பார். கூடப்பிறந்த சகோதரனின் கதறலைக் கேட்டுக்கொண்டே சாப்பிடும் அளவிற்கு யோசேப்பின் சகோதரருக்கு பொறாமை தலைக்கேறியிருந்தது. அவர்களுடைய இரத்த பாசமும், இரக்க சுபாவமும் மரத்துப்போன நிலையில் அவர்கள் யோசேப்பை அவதிப்பட்டு சாகும்படி அடிமையாக விற்றனர்.

அதன் பின்பு கொடிய பாவபழி சுமத்தப்பட்டவராக தான் தவறு செய்ய மறுத்ததற்காக அநியாயமான முறையில் சிறை வாசத்தை அனுபவித்தார். சிறையில் இருந்த யோசேப்பு தான் அடிமையாகப் பிறக்கவில்லை என்பதையும், தான் ஆட்கடத்தல் செய்து விற்கப்பட்டவர் என்பதையும் கூறி தான் விடுதலையாக உதவும்படி ஓர் மனிதனிடம் கேட்பதை பின்வரும் வசனம் கூறுகின்றது:

**ஆதியாகமம் 40:14-15 (14.) இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். 15. நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்.**

எப்படியாவது அச் சிறைக்கிடங்கில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என வாஞ்சித்த யோசேப்பு, மனிதனின் உதவியை நாடுவதைக் காண்கிறோம். ஆனால் அவ் உதவி நழுவிப்போகின்றது. **ஆனாலும் தேவன் ஏற்ற நேரத்தில் யோசேப்பை சிறைச்சாலையில் இருந்து மாத்திரமல்ல; அவன் மேல் இருந்த எல்லா பழிச்சொற்கள், எரிச்சல்கள், பொறாமைகள் அனைத்தி னின்றும் விடுவித்து உயர்த்துவதனைக் காண்கிறோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கும் நீங்கள் யோசேப்பை போன்ற அனுபவங்களூடாக நடந்து கொண்டிருக்கலாம். வீண் பழிகளால் சூழப்பட்டிருக்கலாம். கலங்காதிருங்கள்! விடுவிக்கும் தேவன் நம்மோடிருக்கிறார்.

## 02. அடைக்கலம் தரும் தேவன்

**சங்கீதம் 91:14b என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.**

இந்த மாயையயான உலகத்திலே யாரால் எமக்கு அடைக்கலம் தரமுடியும்? **ஆண்டவர் ஒருவரே நமக்கு அடைக்கலமானவர்.** வேதம் சொல்கிறது: **உபாகமம் 33:27 அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்.** பிரியமானவர்களே தேவன் உங்களுக்கு அடைக்கலம் கொடுப்பார்.

*ஓர் போதகர் தான் ஆராதிக்கும் சபையில் நடைபெற்ற ஒரு நிகழ்வை இவ்வாறாக சொன்னார்: 'தன் பிள்ளைகள், உறவுகளால் கைவிடப்பட்டு யாருமற்ற நிலையில் ஒரு தாய் இருந்தாராம். அவர் ஒரு முறை சபையில் ஜெபிக்கும் போது இவ் வசனத்தை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் 'ஆண்டவரே நீரும் அநாதை, நானும் அநாதை' என்று ஜெபித்தாராம் அந்த ஏழைத் தாய். இருப்பினும் அவரது ஜெபத்தை தேவன் கேட்டு பதிலளித்தாராம்.*

**ஆம் பிள்ளைகளே, ஆதரவாக உங்களுக்கு யாரும் இல்லா விட்டாலும் கலங்க வேண்டாம். ஆண்டவர் உங்களுக்கு அடைக்கலமாக இருப்பார்.**

## 03. மறு உத்தரவு அருளும் தேவன்

**சங்கீதம் 91:15a அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்;**

இயேசுவை நம்பி படகை விட்டிறங்கி கடலின் மேல் நடந்தார் பேதுரு. அது போலவே இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தினால் நாமும் கடலாகிய பிரச்சினைகள், வியாதிகள், பாவ வல்லமைகள் மேல் சேதமில்லாமல் நடக்க முடியும். கடலின் மேல் நடந்த பேதுரு பலத்த காற்றைக் கண்டு பயப்பட்டார். கடலில் மூழ்க ஆரம்பித்தார்.

இருப்பினும் **மத்தேயு 14:30 ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.** உடனே இயேசு அவனுக்கு மறுஉத்தரவு அருளினார். பேதுரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுக்குப் பயந்து அமிழ்ந்து போனது போல் நீங்களும் சம்பந்தமில்லாத காரியங்களினால் அலைசல்பட்டு மூழ்கிக்கொண்டிருக்கலாம். **பயப்படாதிருங்கள். அவர் உங்களுக்கு மறுஉத்தரவு அருளும் தேவனாக இருக்கின்றார்.**

## 04. ஆபத்தில் நம்மோடிருக்கும் தேவன்

**சங்கீதம் 91:15b ஆபத்தில் நானே அவனோடிருந்து.** பொறுத்த நேரம் காலை வாரிவிடும் வஞ்சக மனிதர்கள் நிறைந்த சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'நீ சிரிக்கும் போது பலர் உன்னோடு சேர்ந்து சிரிப்பார்கள்: ஆனால் நீ அழும் போது நீ மட்டும் தான் அழ வேண்டும்' என்று சொல்வது போல்: ஆபத்து நேரம், துன்ப நேரம் நம்மோடிருப்பவர்கள் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். **ஆனால் எவ்வித ஆபத்து நேரமானாலும் ஆண்டவர் நம்மோடிருப்பார்.**

*ஆபிரிக்க காட்டுப்பகுதியில் நடந்த சம்பவத்தை கேள்விப் பட்டேன். இரட்சிக்கப்பட்ட ஓர் இளம்பெண்ணை சிலர் கடத்திச் சென்று காட்டுப்பகுதியில் வைத்து அவளை கற்பழிக்க ஆயத்த மானார்கள். நிலமையின் மோசத்தை அப் பெண் உணர்ந்தாள். ஆனாலும் அவளுக்கு ஏற்படப்போகும் ஆபத்தில் உதவி செய்ய அப்பொழுது யாருமே அவளுக்கு அருகில் இல்லை. இந் நிலையில் அவள் ஆண்டவரை நோக்கி பலத்த சத்தமாய் கதறினாள். அடுத்த கணமே காட்டிற்குள் இருந்து ஓர் சிங்கம் பாய்ந்து வந்ததாம். அவளைக் கற்பழிக்க நினைத்த அனைவரும் சிதறி ஓடினார்கள். தனித்துவிடப்பட்ட அவளை சிங்கம் ஒன்றும் செய்யாமல் அவளைப் பாதுகாக்கும் ஓர் நாயைப் போல் அவளை சுற்றி சுற்றி வந்ததாம். பொலிசார் வந்து அப்பெண்ணை மீட்கும் வரைக்கும் அச் சிங்கம் அவளைப் பாதுகாத்தது.*

ஆம் பிள்ளைகளே ஆபத்து வேளையில் நம்மோடு இருப்பவர் நம் தேவனாகிய கர்த்தரே. அவர் ஜெகோவா ஷம்மா.

## 05. நம்மைத் தப்புவிக்கும் தேவன்

**சங்கீதம் 91:15c அவனைத் தப்புவித்து.**

முன்பக்கம் கடல், பின் பக்கம் எகிப்தின் சேனைகள். இரு புறமும் மலைகள் என்ற சூழ்நிலையில் எங்கும் ஓடமுடியாதவர்களாக இஸ்ரவேல் ஜனங்கள் தவித்துக் கொண்டிருந்தனர். அந்த சூழ்நிலையில் தப்புவதற்கான ஒரு வழி கூட அவர்களுக்கு இல்லை. ஆனால் தேவன் அவர்களை தப்புவித்ததை கீழ் வசனத்தில் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாத்திராகமம் 14:30 இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்.**

இன்றைக்கு நாலா பக்கமும் நெருக்கடிகளால் நீங்கள் சூழப்பட்டிருக்க லாம். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கலாம். தேவன் மேல் விசுவாசமாயிருங்கள். **அவர் உங்களை தப்புவித்து வழிநடத்துவார்.**

# 06. நம்மை கனப்படுத்தும் தேவன்

**சங்கீதம் 91:15d அவனைக் கனப்படுத்துவேன்.**

வேதாகமத்தில் யாபேஸ் என்கிற மனிதனைக் காண்கிறோம். அவரைப் பெற்ற தாய் அவரின் பிறப்பைக் குறித்து சந்தோஷப்படவில்லை. பொதுவாக குழந்தைகள் பிறக்கும் போது பெற்றோர் அகமகிழ்வதுண்டு. ஆனால் இங்கு யாபேசின் பிறப்பில் அப்படி நடக்கவில்லை. அவரது தாயே அறிக்கையிட்டார், நான் உன்னை துக்கத்துடன்தான் பெற்றேன் என்பதாக. அத்தோடு அவரது பெயராகிய யாபேஸ் என்பதன் அர்த்தம் 'துக்கம் உண்டாக்குகிறவன்' என்பதாகும். ஆனால் அவர் தனது பரம தகப்பனை நோக்கி கதறி ஜெபித்தார். முடிவு என்ன? வசனத்தைப் பாருங்கள்.

**1நாளாகமம் 4:9 யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம்பெற்ற வனாயிருந்தான்.** யாபேசை கனப்படுத்திய தேவன் உங்களையும் கனப்படுத்து வார். நீங்கள் உங்கள் சகோதரருக்கு ஆசீர்வாதமாக இருப்பீர்கள்.

பிரியமுள்ள வாசகர்களே! இதுவரைக்கும் தேவன் நமக்கு தந்துள்ள வாக்குத்தத்தங்களை குறித்து பார்த்தோம்.

1. அவர் நம்மை விடுவிக்கும் தேவனாயிருக்கிறார்
2. நமக்கு அடைக்கலம் தரும் தேவனாயிருக்கிறார்
3. அவர் நமக்கு மறுஉத்தரவு அருளும் தேவனாயிருக்கிறார்
4. ஆபத்தில் நம்மோடிருக்கும் தேவனாயிருக்கிறார்
5. அவர் நம்மை தப்புவிக்கும் தேவனாயிருக்கிறார்
6. அவர் நம்மை கனப்படுத்தும் தேவனாயிருக்கிறார்

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்ற தேவன் நாமும் அவருக்காக சில காரியங்களை செய்ய வேண்டும் என அவர் எதிர்பார்க்கின்றார். அவைகளையும் நாம் வெகு சிரத்தையாக கைக்கொள்ளும் போது தேவனது வாக்குகளும் நமது வாழ்வில் நிறைவேறுவதைக் காணமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது தேவன் எம்மிடத்தில் எதிர்பார்க்கும் சில காரியங்களைக் குறித்து காண்போம்.

## 01. தேவன் மேல் வாஞ்சையாக இருக்க வேண்டும்

**சங்கீதம் 91:14a அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்;**

வாஞ்சை எனும் போது தேவனை நேசிக்கிறவர்களாக நாங்கள் வாழவேண்டும். யோபுவுக்கு தேவன் மேல் இருந்த வாஞ்சையை பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகிறது.

**யோபு 19:27 அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது.**

தன்னுடைய உள்ளம் சோர்ந்து போகும் அளவிற்கு அவர் தேவனை வாஞ்சித்தார். இந் நாட்களில் நாங்களும் தேவனை நேசித்து அவரை வாஞ்சிக்கும் போது யோபுவுக்கு வெளிப்பட்ட தேவன் நமக்கும் வெளிப்படுவார்.

## 02. அவரைப் பற்றி நன்றாக அறிய வேண்டும்

**சங்கீதம் 91:14b என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.**

'என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால்' என்பது இலகு தமிழில் 'அவன் என் பெயரை ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால்' என மொழிபெயர்த்துள்ளனர். அநேகர் தேவன் நல்லவர், அவரே உண்மையான தெய்வம் என தெரிந்திருந்தாலும் அவரை ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. காரணம் அவரை ஏற்றுக்கொண்டால் தாங்கள் செய்கின்ற பாவங்களைவிட்டுவிட வேண்டுமே என நினைத்து பின்னுக்கு நிற்பதனைக் காண்கிறோம். ஆனால் நீங்களோ தேவ பிள்ளைகளே அவரை இன்னுமாய் உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்வதற்கு என்ன தடைகள் உள்ளதோ அவைகளையெல்லாம் அகற்றிவிட்டு அவரை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்ளும் போது அவர் நிச்சயம் தனது வாக்குத்தத்தங்களை உங்கள் வாழ்வில் நிறைவேற்றுவார்.

## 03. அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும்

**சங்கீதம் 91:15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நோக்கி கூப்பிடுதல் என்பது எமது ஜெப ஜீவியத்தைக் குறித்தும் பேசுகிறது. நாங்கள் தன்னிடமாய் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என எமது பரமபிதா விரும்புகிறார். 'ஜெபமே ஜெயம்' என்பது போல் நாம் ஜெபிக்கும் போது தேவன் பலத்த கிரியைகளைச் செய்வார். எத்தனையோ தடவைகள் எங்கள் ஜெபத்திற்கு பதில் தந்த ஆண்டவர் இன்றைக்கும் பதில் தர வல்லவராய் இருக்கிறார். அவர் கேட்பதெல்லாம், 'நீ என்னை நோக்கிக் கூப்பிடு; அப்பொழுது நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களைச் செய்வேன்' என்பது தான் - எரேமியா 33:3. நமக்கு உத்தரவு கொடுக்கிற தெய்வம் நம்மோடிருக்கிறார். அவரை நோக்கிப் பார்ப்போம்.

சிலுவை நாதர் நமக்குப் போதுமானவர்.

அனைவருக்கும் மறுபடியும் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 116

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

02. கிதியோனின் (நியாயாதிபதிகள் 8:35)

04. லோவிசாள் (IIதீமோத்தேயு 1:5)

05. மத்தனியா (IIஇராஜாக்கள் 24:17)

07. சவுல் (Iசாமுவேல் 10:22)

11. யோயாக்கீம் (எரேமியா 36:22)

**வலமிருந்து இடமாக**

01. சாப்நாத்பன்னேயா (ஆதியாகமம் 41:45)

06. லேவியர் (எண்ணாகமம் 18:23)

08. பித்தோம் (யாத்திராகமம் 1:11)

09. அமுத்தாள் (IIஇராஜாக்கள் 23:31)

10. யாகேல் (நியாயாதிபதிகள் 5:24)

**மேலிருந்து கீழாக**

01. சாப்பாத் (IIஇராஜாக்கள் 3:11)

03. மேவிபோசேத் (IIசாமுவேல் 21:7)

07. சமாரியா (எசேக்கியேல் 23:4)

**கீழிருந்து மேலாக**

05. மல்கியா (மல்கியா 3:16)

09. அபிமெலேக்கு (நியாயாதிபதிகள் 9:6)

10. யாக்கோபு (ஆதியாகமம் 31:40)






**மீட்பின் ஆண்டு - 2024**

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார்.**

**மீகா 4:10**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ திருமதி. J.பிலிப்




புதுவருட வாழ்த்துக்களை அனலின் பெண்கள் பகுதி அனைவருக்கும் தெரிவிக்கின்றது. கர்த்தருடைய பெரிதான இரக்கத்தினால் நாம் 2023ஆம் ஆண்டை கடக்க தேவன் கிருபை செய்தார். கர்த்தர் எமது சபைக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி **'உன்னைக் காக்கும்படி உன்னுடனே இருக்கிறேன்'** என்பதை நம் எல்லோரிடமும் கூட இருந்த தேவனுக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக.

புகழப்படுவாள், யார் புகழப்படுவாள்? **கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் - நீதிமொழிகள் 31:30**b அதிகமாக புகழ்ச்சியை விரும்புகிறது பெண்களாகிய நாங்கள் தான். எம்மை பார்த்து யாரும் அழகாக சேலை அல்லது ஆடையை அணிந்திருக்கிறீர்கள், நன்கு சமைத்திருக்கிறீர்கள், நன்றாக படிக்கின்றீர்கள், நன்றாக பாடுகின்றீர்கள்... என்று பலவிதங்களில் புகழ்வார்கள். இப்படி பலவிதமான புகழ்ச்சியை அதிகம் விரும்பி கேட்பது பெண்கள்.

தேவன் விலக்கிய கனியைக் குறித்து முதலாவது பிசாசு புகழ்ந்தான். எப்படி புகழ்ந்தான்? கண்கள் திறக்கப்படும் – **ஆதியாகமம் 3:5 நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றது**. இதைக் கேட்ட ஏவாளுக்கு ஏற்பட்ட பெரிய ஆசை தேவர்கள் போல் இருக்க வேண்டும். அந்த புகழை தாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காய் கனியை பறித்து புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். பிசாசின் புகழ்ச்சியை கேட்டு நடந்ததன் முடிவு என்ன? நிர்வாணம் (ஆதியாகமம் 3:10) அது மட்டுமல்ல ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். புகழை எதிர்பார்த்தவர்களுக்கு கிடைத்தது அவமானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வாசிக்கும் சகோதரியே இந்த வருடம் கர்த்தர் உன்னை புகழ விரும்புகின்றார். யாருக்கு இந்த புகழ். **நீதிமொழிகள் 31:30 சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்.**

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் என்றால் என்ன? **யாத்திராகமம் 1:15-17 (15.) எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி: 16. நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மணையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான். 17. மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.**

இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார். என்ன நன்மை செய்தார்? **அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்.**

கடந்த ஆண்டில் உன் குடும்ப வாழ்க்கையில் நீ எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறவில்லையா? உன் குடும்பம் தழைக்கவில்லையா? உன் வாழ்க்கையை நீ ஆராய்ந்து பார். தேவனுக்குப் பயப்படவேண்டிய நேரங்களில் நீ பயப்படாமல் உன் விருப்பப்படி செய்தாயா? தேவனுக்கும், தேவ வார்த்தைகளுக்கும் கீழ்ப்படியாமல் இருந்த நேரங்கள் என்ன? மருத்துவச்சிகள் பிழையான காரியங்களுக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. ராஜாவுக்கு கூட மருத்துவச்சிகள் கீழ்ப்படியவில்லை. **அவர்கள் தேவனுக்கு மட்டும் தான் பயந்து நடந்தார்கள்.** அதினால் அவர்களுடைய குடும்பங்கள் தழைத்தன.

சகோதரியே கடந்த ஆண்டு உலகத்தார் உன்னைப் புகழ வேண்டும் என்பதற்காய் உலகத்துடன் ஒத்த வேஷம் தரித்து நடந்தாயா? **உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக்கோபு 4:4)** என்று வேதம் கூறுகின்றது. இவ்வாண்டு உன் குடும்பத்தை தேவன் தழைக்கப்பண்ண ஆயத்தமாயிருக்கிறார். நீ செய்ய வேண்டியது மருத்துவச்சிகள் போல நீ தேவனுக்குப் பயப்பட வேண்டும். தேவனுக்கு பிரியமற்ற காரியங்களில் ஒன்றிலும் நீ ஈடுபடக்கூடாது. அப்போது நீயும் தேவனால் புகழப்படுவாய். தேவனால் நீ புகழப்பட்டால் உன் குடும்பம் தழைக்கும். உன் குடும்பம் தழைத்து வருவதை பார்த்து உன்னிடம் பெண்கள் வருவார்கள். அவர்களுக்கு நீ சொல்வதற்கு ஒரு செய்தி உண்டு; அது தான் 'கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்'.

**சங்கீதம் 111:10 கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இன்கிரிட் கவுஸ்கி - 1995

## தன்னலமில்லாத அன்பு

'அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'

'CMSன் அம்மா' என்று அழைக்கப்படும், இன்கிரிட் கவுஸ்கி அவர்கள், அவ்விதமே வாழ்ந்து காட்டியவர்கள். ஏழைகளின் தாயாராக, எளியவர்களின் நண்பராக, தன்னையே தியாகமாக்கினார்.

CMS என்பது சுமார் 30000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வாழ்வு கொடுத்து, அவர்களை இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்கச் செய்து, இன்றும் வழிகாட்டும் ஓர் சிறந்த, ஒப்பற்ற நிறுவனம்.

சமுதாயத்தில் ஆதரவற்று, அடைக்கலமில்லாமல், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, வாழ வழி தெரியாமல் தவித்த ஏழைச் சிறுவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த (கிறிஸ்டியன் மிஷன் சர்வீஸ்) CMSன் முதுகெலும்பாய் திகழ்ந்தவரே, இன்கிரிட் கவுஸ்கி.

ஓர் நாள், சிறுவன் ஒருவன், உடல்நிலை சரியில்லாததால், வாந்தியெடுக்க ஆரம்பித்தான். அதனைக் கண்டார் இத்தாய். ஓடிச்சென்றார், அவன் அருகில் உட்கார்ந்தார், அவனை அரவணைத்தார். தன் கைக்குட்டையை எடுத்து, அவன் வாந்தியை கைகளில் ஏந்தினார். அவனைக் கவனிப்பதற்கு தாதியர்கள் இருந்தும், கிறிஸ்துவின் அன்பு இவரை உந்தித்தள்ள, குழந்தைகளின் உற்றத் தாயாராக, தன் பணிகளை சிறப்புடன் செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களில் ஓய்வுநாள் பள்ளிகளை ஆரம்பித்தார். ஒவ்வொரு நிமிடமும் கிறிஸ்துவின் அன்பை, ஒருவருக்காவது கூற வேண்டும் என்ற ஏக்கம் கொண்டவர். அவ்விதமாகவே, அங்கும் இங்கும் சுற்றித்திரிந்து, பேச்சில் மட்டுமல்லாமல், செயலிலும் காட்டியவர். தன்னிடம் உள்ள எந்த பொருளையும், பிறருக்கு கொடுத்துவிட்டு, வெறுங்கையோடு வீடு செல்வார்.

CMSன் நிர்வாகி 'ர்ஸ்ட் கவுஸ்கி அவர்களின் செயல்பாட்டுக்கு, வேகத்தையும், ஆர்வத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தவர், இதனால் இந்திய நாடெங்கும் பல சிறுவர் இல்லங்கள் உருவாகின. இன்றும் 6000க்கும் மேற்பட்ட சிறுவர்கள் படித்து வருகின்றனர்.

**அன்பரே! கிறிஸ்துவின் சிந்தை உங்களில் செயல்படுகின்றதா?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நல்லவனாக இருப்பதும், நன்மை செய்வதுமே நமது நற்செய்தி பணியாக இருக்க வேண்டும். — சார்லஸ் தெபூக்கோ

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 15**

# ஃபிளேவியஸ் யோசிபஸ் 37 - 100



## தற்கொலை முடிவல்ல

இப்போதெல்லாம் தற்கொலை முயற்சிகள் பற்றிய செய்திகளை அதிகமாக செய்தித்தாள்களில் நாம் பார்க்க முடிகின்றது. ஏன் பலர் தற்கொலை முயற்சியில் இறங்குகிறார்கள்? பிரச்சினைகளும், வேதனைகளும் ஏற்படும்போது, தற்கொலை தான் தீர்வு என்று எண்ணுதல் மாபெரும் தவறு. வாழ்ந்துகாட்ட அழைக்கப்படும் நாம், விழுந்துவிடுவது சரியாகுமோ?

கி.பி 66 முதல் 70 ஆண்டுகளில் தனிநாடு வேண்டி, யூதர்கள் ரோமர்களுக்கு எதிராக போர் தொடுத்தனர். அப்போரில் வெற்றியும் பெற்றனர். இதனைக் கண்ட நீரோ மன்னன் கொதித்து எழுந்தான். வெஸ்பாசியான் என்னும் படைத்தலைவனை யூதாவுக்கு அனுப்பினான்.

மிகவும் சீற்றத்துடன் வந்த அவன், யூதர்களின் பட்டணங்களை ஒவ்வொன்றாக அழிக்க ஆரம்பித்தான். யோத்தப்பா என்று ஒரு பட்டணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதர்களின் எஞ்சிய புரட்சியாளர்கள் இப்பட்டணத்திலே தான் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ரோமர்கள் கையில் சிக்கி, அடிமைகள் ஆவதைவிட , தற்கொலை செய்வது மேல் என்ற கொடூரமான முடிவுக்கு வந்தனர்.

புரட்சியாளர்களின் கூட்டத்தில் மாட்டிக்கொண்ட யோசிபஸ், தற்கொலை முடிவை விட்டு விலகுமாறு அப்புரட்சியாளர்களை வேண்டினார். ஆயினும், அவர்கள் இவர் பேச்சைக் கேட்கவில்லை. தங்கள் முடிவின்படியே தற்கொலை செய்து கொண்டனர்.

இவர் கி.பி 67ஆம் ஆண்டு ரோமர்களிடம் சரணடைந்தார். இதனால் கைதியாக பிடிக்கப்பட்டு, ரோம் நகருக்கு கொண்டு போகப்பட்டார். கி.பி 70ஆம் ஆண்டு எருசலேம் தேவாலயத்தின் அழிவை நேரில் கண்ட சாட்சி இவர். தம்மை ரோம பிரஜையாக மாற்றிக் கொண்டு ஃபிளேவியஸ் என்னும் பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். இவர் ஒரு மாபெரும் எழுத்தாளர். இயேசு கிறிஸ்துவின் சரித்திரத்தை ஆதாரத்துடனும், தெளிவுடனும் வாசிப்பவர்களை கிறிஸ்துவின்பால் வழிநடத்தும் முறைகளிலும் எழுதி வெளியிட்டார். 'யூதர்களின் யுத்த சரித்திரம்', 'பண்டைக்கால யூதேயா' போன்ற புத்தகங்களை எழுதிய இவர், ஓர் சிறந்த சரித்திர ஆசிரியராவார்.

**அன்பரே! சரித்திரம் படைப்பதில் உங்கள் ஆர்வமும், தீவிரமும் என்ன?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** உமது நோக்கம் உயர்ந்ததாயிருப்பின் நீயும் உயர்வாய்; உன் மூலம் உலகமும் வளமானதாகும் — பிலிப்ஸ் புருக்ஸ்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 12**


---

**வினாவிடை 118**

**சரியான பதில்கள்**

01. எலியா - 1இராஜாக்கள் 19:1-3
02. பாகால் தீர்க்கதரிசிகள் - பலிபீடத்திற்கு (1இராஜாக்கள் 18:26)
03. சங்கீதம் 44:21
04. எரேமியா 46:22
05. எரேமியா - புலம்பல் 3:17
06. ரெபெக்காள் - ஆதியாகமம் 27:8
07. நியாயசாஸ்திரி - மத்தேயு 22:35-36
08. இயேசு - மாற்கு 5:34
09. தாவீதும், இஸ்ரவேலரும் - கர்த்தருக்கு முன்பாக (11சாமுவேல் 6:5)
10. யூதா - ஆதியாகமம் 49:9-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் ஜோஹணன் டேவிஸ் பிலிப்,
தலைவர்/தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம் - இலங்கை.




## மீட்பின் ஆண்டு – 2024

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீக்கலாக்கி மீட்பார். - மீகா 4:10**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் காலடியெடுத்து வைத்திருக்கும் அனைத்து அனல் சஞ்சிகை வாசகர்களுக்கும் மகிழ்ச்சியான புத்தாண்டு நல்வாழ்த்துக் களை தெரிவித்துக் கொள்வதுடன் இப் புதிய ஆண்டின் முதல் அனல் சஞ்சிகை வாயிலாக உங்கள் யாவரையும் சந்திப்பதில் மகிழ்வடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 2023ஆம் ஆண்டை திரும்பிப் பார்க்கின்ற போது எத்தனையோ பாடுகள், பிரச்சினைகள், நெருக்கடிகள், இன்னல்கள், இடர்கள், பொருளாதார நெருக்கடிகள் இருந்த போதிலும் ஒரு குறைவின்றி ஆண்டவருடைய நடத்து தல் அற்புதமாகவும் அதிசயமாகவும் இருந்தது. என்னுடைய வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் முந்திய ஆண்டிலே ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்களிற்கு ஆச்சரியமான பதில்களைத் தந்தார். ஆண்டவருக்கே துதி கன மகிமை யாவையும் செலுத்துகின்றேன்.

2023ஆம் ஆண்டு கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்

**'உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்'**

**எரேமியா 1:8**

ஆண்டவர் தன்னுடைய வார்த் தையின்படியே **'இருக்கிறவராக இருக்கிறேன்'** என்ற நாமத்தையுடைய சர்வவல்லமையுள்ள தேவன் நம்மை பாதுகாக்கும் ஆண்டவராக இருந்து ஓர் **அடைக்கல ஆண்டாக** நமக்கு கொடுத்த படியால் அவரை மகிமைப்படுத்துகின் றேன்.

அநேகருடைய வாழ்வில் 2023 ஆம் ஆண்டு **'அடைக்கல ஆண்டாக'** விளங்கியிருந்தபடியால் அனேகரு டைய வாழ்க்கையிலே கண்டும் அனே கருடைய சாட்சிக்கூடாகவும் ஆண்டவர் தன்னுடைய வாக்குத்தத்தத்தில் உண்மை யுள்ளவராக இருந்ததை பொருள் சேதமேயன்றி உயிர் சேதம் ஏற்படாமல் வெளிப்படுத்தினார். அவருக்கே மகிமை.

இன்று பிறந்திருக்கும் 2024 புதிய ஆண்டில் ஆண்டவர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்த வசனம்:

**'கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.'**

**மீகா 4:10**

**'The LORD shall redeem thee from the hand of thine enemies.'**

**Micah 4:10**

மீகா தீர்க்கதரிசிக்கூடாக வெளிப் படுத்திய இவ் தீர்க்கதரிசன வாக்குத் தத்த வசனத்திற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

இந்த வார்த்தை யாருக்கு சொல்லப்பட்டிருக்கிறது? மீகா 4:10 ஆம் வசனத்தின் ஆரம்பம்: **"சீயோன் குமாரத்தியே!"** என்று ஆரம்பிப்ப தனை அவதானிக்க முடியும். எனவே இவ் வார்த்தை சீயோன் குமாரத்திக் குரியது.தேவனால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களாகிய **'சீயோன் குமாரத்தியே, கர்த்தர் உன்னை உன் சத்துருக் களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்'.**

சீயோன் குமாரத்தி என்றால், **ஆண்டவருடைய மணவாட்டி, மறுபடி பிறந்து இரட்சிக்கப்பட்டு பரிசுத்த வாழ்வு வாழ்பவர்கள்.** வாக்குத்தத்தம் என்பது நிபந்தனைகளுக்குட்பட்டது. அது எல்லோருக்கும் உரியது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாறாக அது ஆண்டவருடைய பிள்ளை களுக்கு மட்டும் உரியது.**

இந்த 2024 ஆம் ஆண்டு நமக்கு **'மீட்பின் ஆண்டாக'** அமைய வேண்டுமென்றால்; முதலாவது நாம் 'சீயோன் குமாரத்தி' என்கிற ஸ்தானத் தில் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆண்டவருடைய பிள்ளை கள் கிட்டத்தட்ட 1700Km தூரத்திலுள்ள பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட துன்பமான காலத்தில் வாழ்கின்றார் கள். இவ் இக்கட்டான காலத்தில் தான் மீகா தீர்க்கதரிசிக்கூடாக இவ் வார்த்தை தம்முடைய ஜனங்களை நோக்கி வெளிப்படுகிறது.

ஆண்டவருடைய பிள்ளைகளை அல்லது சீயோன் குமாரத்தியை, அவர் களது சத்துரு நாடு கடத்தப்பட்ட ஓர் நிலைக்குத்தள்ளி அவர்களை நெருக்கி ஒடுக்கினான். அதன்விளைவாக தேவ ஜனங்கள் அந்த பாபிலோன் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த சூழ்நிலையில் தான் ஆண்டவருடைய வார்த்தை இவ்வாறு வெளிப்பட்டது; **'ஆண்டவர் உன் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்'.**

## இது *Year of Redemption* மீட்பின் ஆண்டு

**மீட்பு / *Redeem*** என்ற பதத் திற்கான சரியான அர்த்தம் **'கிரயம் செலுத்துவதன் மூலம் விடுவித்து திரும்பவும் உரித்தாக்குவது'** அதாவது ஒருவருக்குரியதான ஒன்று அவரை விட்டு கைநழுவி சென்று விட்டால், அதை திரும்பவும் தனதாக்கிக் கொள்வதற்கு பிரயாசப்பட்டு அதனை மீளப்பெறு வதனைக் குறிப்பதாகும்.

ஒரு சிறுவன் மழைகாலத் தில் ஆற்று ஓரத்தில் கப்பல் செய்து அதனை தண்ணீரில் விட்டு விளையாட ஆசைப்பட்டான். ஆகவே அதற்காக அழகான ஒரு சிறிய விளையாட்டு கப்பலை மிகுந்த பிரயாசத்துடன் உருவாக் கினான். அதன் பின் ஒவ்வொரு நாள் மாலையிலும் அந்த ஆற்று ஓரமாய் சென்று, தண்ணீரில் அந்த கப்பலை விட்டு விளையாடுவான். இவ்வாறு ஒரு நாள் பலத்த மழை யினால் அந்த ஆற்றில் தண்ணீர் அதிகமாக பெருக்கெடுத்து ஓடியது. அவ்வேளை அந்த ஆற்றுப்பகுதி யில் அவன் வழமை போலவே தன்னுடைய அந்த சிறிய கப்பலை தண்ணீரில் விட்டு விளையாட ஆரம்பித்து அதை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து பாய்ந்தது. அந்த வெள்ளத்திற்குள் சிக்கி கப்பல் நீரோட்டத்துடன் ஓடிச்சென்றது. அதைப் பிடிக்க அவன் தொடர்ந்து ஓடிச்சென்று பார்த்தான். ஆனால் அது அவனுக்கு அகப்படவில்லை. மாலை இருள் சூழ்ந்த வேளை வரும்வரை மழை வெள்ளத்திற் குள் வேதனையுடன் தொலைந்த தனது கப்பலைத் தேடினான். ஆனால் அதுவோ அவன் கண்ணில் படவில்லை. ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் சென்றான். அதன் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில நாட்களுக்கு பிற்பாடு அவன் பாடசாலை முடிந்து வரும் வழியில் ஒரு கடையில் அந்த கப்பல் விற்பனைக்காக வைக்கப் பட்டிருப்பதனை கண்டான். உடனே அந்த கடைக்கு ஓடிச் சென்று பார்த்தான். அது தான் செய்த அதே கப்பல். அதை தூக்கி அது தன்னுடையது என்று சொல்லி வெளியே கொண்டு செல்ல முற்பட்டான். ஆனால் கடைக்காரனோ அதைக் கொண்டு செல்ல முடியாது என்று தடுத்து, நான் பணம் கொடுத்துதான் அந்த கப்பலை கொள்வனவு செய்தேன் என்றான். ஆனால் அந்த சிறுவனோ இல்லை, இதன் உரிமையாளர் நான்தான் என்று அடையாளப் படுத்தினான். ஆனால் கடைக் காரனோ விடவில்லை. நீ உரிமை யாளர்தான் என்றாலும் என் கடையிலிருந்து இதனை திரும்ப வெளியே கொண்டு செல்ல வேண்டுமெனில் நீ பணம் செலுத்தி னால் மட்டுமே அது முடியும் என்று விடாப்பிடியாக நின்றார். அந்த சிறுவன் தன் வீட்டிற்கு ஓடிச் சென்று தன்னுடைய சேமிப்பு பணம் முழுவதையும் எடுத்து எண்ணி அதற்குரிய பெறுமதியை ஒருவாறு சேர்த்து அடுத்த நாள் காலையிலேயே பணத்தை செலுத்தி தன் கப்பலை மீட்டெடுத்தான். மிக சந்தோஷத்து டன் கப்பலை கையில் எடுத்து '<u>நீ எனக்கு இரண்டு முறை சொந்தம்'. ஒன்று உன்னை உருவாக்கினதும் நான்தான், இப்போது உன்னை பணம் செலுத்தி பெற்றுக் கொண்டதும் நான் என்று கூறினான்.</u>

பரிசுத்த வேதாகமத்தில் பார்க் கும் போது சத்துருக்களால் ஏற்பட்ட நெருக்கடிகள் நிமித்தம் ஜனங்கள் அதிகமாய் புலம்பி, அழுது, கூக்குர லிட்டு, பரலோகத்தை நோக்கி முறையிடு கின்ற போது ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை பல சந்தர்ப்ப சூழ்நிலை களிலிருந்து அவர்களை மீட்டு எடுத்த தனை அவதானிக்க முடியும்.

**நியாயாதிபதிகள் 6:3-6 (3.) இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும் போது, மீதியானியரும் அமலேக்கிய ரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர் களுக்கு விரோதமாய் எழும்பி வந்து: 4. அவர்களுக்கு எதிரே பாளய மிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதே போவார்கள். 5. அவர்கள் தாங்கள் மிருக ஜீவன்களோடும், தங்கள் கூடாரங்க ளோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாத தாயிருக்கும்; இந்தப்பிரகாரமாக தேசத் தைக்கெடுத்து விட அதிலே வருவார்கள். 6. இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப் பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரவேலருக்கு விரோதமாக மீதியானியர், அமலேக்கியர், கிழக்கத்தி புத்திரர் எழும்பி, அவர்களை அழித்து பலவித தீமைகளைச் செய்து இஸ்ர வேலரை சிறுமைப்படுத்தி, கொடுமைப் படுத்திக்கொண்டு வருவதனை அவ தானிக்கிறோம். தேவ ஜனத்தை அவர்கள் சத்துருக்கள் இவ்விதமான நெருக்கடி நிலமைக்குள் தள்ளிவிட்ட போது அவர்கள் தங்கள் ஆண்டவரை நோக்கி முறையிட்டார்கள். தங்கள் சத்துருக்களின் நெருக்கடி நிலைக்குள் சிக்கித்தவித்த போது தங்கள் மீட்புக்காக ஆண்டவரை மாத்திரமே நோக்கிப் பார்க்க வேண்டும் என்பதனை அவர் கள் புரிந்துவிட்டார்கள்.

ஆகவே சத்துருக்கள் சூழ்ந்த போது ஆண்டவரை நோக்கி பார்க்கி றார்கள். இன்றைக்கு நாம் எம்மை 'தேவ பிள்ளைகள் அல்லது இரட்சிக்கப்பட்ட வர்கள்' என்று கூறுகின்றோம். ஆனால் எம்மை சூழவும் பலவிதமான நெருக்கடி யான சூழ்நிலைகள் அல்லது எம்மை சத்துருக்கள் சூழும் போது நாம் என்ன செய்கிறோம்?

இஸ்ரவேல் ஜனங்கள் ஆண்ட வரை நோக்கிப் பார்த்தபடியால் ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகளை மீட்டெடுக்க ஒருவனை தெரிவு செய்கின் றார். அவன் தான் கிதியோன்.

**நியாயாதிபதிகள் 6:11 அதற்குப் பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலி மரத்தின் கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனு டைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற் காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்.**

அவன் ஏற்கனவே செய்து கொண்டிருந்த வேலை மீட்டெடுக்கின்ற வேலை. இவ் வசனம் தெளிவாக கூறுவது **'கோதுமையை மீதியானி யரின் கைக்கு தப்புவிக்க அவன் ஆலைக்குச் சமீபமாய் அதை போரடித்தான்.'**

**நியாயாதிபதிகள் 6:12-16 (12.) கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். 13. அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங் களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானி யர் கையில் எங்களை ஒப்புக்கொடுத் தாரே என்றான். 14. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்பு கிறவர் நான் அல்லவா என்றார். 15. அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். 16.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடே கூட இருப்பேன். ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்.**

இவ் வசனத்தில் ஆண்டவர் அவனை நோக்கி; பராக்கிரமசாலியே என்று சொல்லி, முழு இஸ்ரவேல் ஜனங்களையும் மீதியானியரின் கைக்கு மீட்பதற்கு ஓர் பாத்திரமாக அவனை அழைப்பதனை அவதானிக்க முடியும். அதன் பின் இஸ்ரவேலருடன் கிதியோன் புறப்பட்டு, மீதியானியருடன் யுத்தம் பண்ணி, அவர்களை சிதறடித்து இறுதியில் மீதியானியருடைய ராஜாக்கள் எல்லோரையும் சங்கரித்து ஜெயத்தைப் பெற்றுக் கொள்கின்றான். அதன் பின்;

**நியாயாதிபதிகள் 8:22 அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் கிதியோனை நோக்கி: நீர் எங்களை மீதியானியர் கைக்கு நீங்கலாக்கிவிட்டபடியினால் நீரும் உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரனும், எங்களை ஆளக் கடவீர்கள் என்றார்கள்.**

முழு ஜனங்களும் தங்களை 'மீட்டது' கிதியோன் என்பதை உணர்ந்து அவனை தங்களின் நியாயாதிபதியாக்கினார்கள்.

**நியாயாதிபதிகள் 8:28 இந்தப் பிரகாரம் மீதியானியர் திரும்பத் தலையெடுக்கக்கூடாதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்; தேசமானது கிதியோனின் நாட்களில் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது.**

**கிதியோன் இஸ்ரவேலரை அவர்கள் சத்துருக்களாகிய மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி மீட்டு நாற்பது வருடங்கள் ஒரு தலைவனாக இருந்தான். ஜனங்கள் அமைதலாக வாழ்ந்தார்கள்.**

அதே போல ஒருமுறை இஸ்ரவேலருக்கு விரோதமாக பெலிஸ்தர் பாளயம் இறங்கி யுத்தம் பண்ண ஆயத்தமானார்கள். இப்படியான நெருக்கடி நிலைக்கு முகம் கொடுத்த போது இராஜாவாகிய சவுலின் மகன் யோனத்தான் தன் ஆயுததாரியுடன் பேசி இஸ்ரவேலரை பெலிஸ்தரிடமிருந்து மீட்டெடுக்க யுத்தத்திற்கு போவோம் என்று பேசி அவர்கள் இருவரும் யுத்தத்திற்கு புறப்பட்டார்கள்.

**1சாமுவேல் 14:6-10 (6.) யோனத்தான் தன் ஆயததாரியாகிய வாலிபனை நோக்கி: விருத்தசேதனம் இல்லாதவர்களுடைய அந்தத் தாணையத்துக்குப் போவோம் வா; ஒரு வேளை கர்த்தர் நமக்காக ஒரு காரியம் செய்வார்; அநேகம்பேரைக்கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை என்றான். 7. அப்பொழுது அவன் ஆயுததாரி அவனைப் பார்த்து: உம்முடைய இருதயத்தில் இருக்கிறபடியெல்லாம் செய்யும்; அப்படியே போம்; இதோ, உம்முடைய மனதுக்கு ஏற்றபடி நானும் உம்மோடேகூட வருகிறேன் என்றான். 8. அதற்கு யோனத்தான்: இதோ, நாம் கடந்து, அந்த மனுஷரிடத்துக்குப்போகிறவர்கள்போல அவர்களுக்கு நம்மைக் காண்பிப்போம். 9. நாங்கள் உங்களிடத்துக்கு வருமட்டும் நில்லுங்கள் என்று நம்மோடே சொல்வார்களா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**னால், நாம் அவர்களிடத்துக்கு ஏறிப் போகாமல், நம்முடைய நிலை யிலே நிற்போம். 10. எங்களிடத்துக்கு ஏறி வாருங்கள் என்று சொல்வார்களா னால், ஏறிப்போவோம்; கர்த்தர் அவர் களை நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார்; இது நமக்கு அடையாளம் என்றான்.**

பெலிஸ்தர் இவர்களைப்பார்த்து தப்புக்கணக்கோடு, அவர்களை அழித்து விடமுடியும் என்று நம்பி அவர்களை தங்களிடமாய் அழைத்தார்கள். ஆனால் ஆண்டவர், அந்த இருவரைக்கொண்டும் பெலிஸ்தரை முறிய அடித்து இஸ்ர வேலரை யுத்த சூழ்நிலையிலிருந்து மீட்டெடுத்தார். **ஆண்டவர் ஒருவரை ஒரு பயங்கரமான சூழ்நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்று நினைத் தாரானால் அதை யாராலும் தடுக்க முடியாது.** அதற்காக இயற்கையைக் கூட மாற்றியமைக்க வல்லவராயிருக் கிறார்.

சிலவேளைகளில் தன்னு டைய ஒரு சில பிள்ளைகளுக்காக நாட்டு சட்டங்களையே மாற்றியமைத்து அவர்களுக்கு விடுதலையை கொடுத் திருக்கிறார். கொஞ்சம் பேரைக் கொண்டாகிலும் அனேகம் பேரைக் கொண்டாகிலும் இரட்சிப்பது அவருக்கு லேசான காரியம்.

**1சாமுவேல் 14:23 இப்படிக் கர்த்தர் அன்றையதினம் இஸ்ரவேலை ரட்சித்தார். அந்த யுத்தம் பெத்தாவேன் மட்டும் நடந்தது.**

எல்லாவற்றிற்கும் மேலாக மீட்பின் சிறந்த உதாரணம்; **'ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவே'.** பாவத் திலும் சாபத்திலும், பிசாசின் பிடியிலும், இருளின் அதிகாரத்திலும் வானமண்ட லத்தின் பொல்லாத சேனைகளின் பிடியிலும் அகப்பட்ட எம்மை விடுவிப்ப தற்காக அந்த ஆண்டவரே மனித வடிவிலே பூமிக்கு இறங்கி வந்தார்.

***தீத்து 2:14 அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்தஜனங் களாகவும், நற்கிரியைகளைச்செய்யப்பக்திவைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக் கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார்.***

மனிதகுலம் பாவத்திற்குள் பிரவேசித்து அக்கிரமத்திலும் துன் மார்க்கத்திலும் வீழ்ந்து, மீட்கப்பட முடியாத நிலைக்குள் அமிழ்ந்து விடிவில்லாமல் தவித்த போது, முழு மனித குலத்தையும் இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய நிலையிலிருந்து மீட்டெடுக் கும் வேலையை ஆண்டவர் மனிதர் களைக் கொண்டு அல்லாமல் **தானே இப் பூமிக்கு இறங்கி வந்தார்.** அவர் நன்மை செய்கிறவராய் பூமியிலே சுற்றித்திரிந்து, வியாதிப்பட்டவர்களின் வியாதிகளை சுகமாக்கி, கட்டுக்களை அறுத்து, பிசாசுகளைத் துரத்தி, அற்புதங் களை செய்து ஜனங்களை இவ்வித நிலைமைகளிலிருந்து நீங்கலாக்கி மீட்டெடுத்தார். இயேசு கிறிஸ்துவின் வேளை வந்த போது அவரைப் பிடித்து, அடித்து, காயப்படுத்தி, தலையில் முள்முடி சூட்டி, கரம் - கால்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணிகள் அடித்து சிலுவையில் அறைந்தார்கள். அவருடைய விலா வில் ஈட்டியால் குத்தினார்கள். அவரு டைய இரத்தம் முழுவதையும் பூமியில் சிந்தி மரித்தார், அடக்கம் பண்ணப் பட்டார். ஆனாலும் மூன்றாம் நாள் அதிகாலை கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி உயிரோடு எழுந்து இன்றும் மீட்பராக ஜீவித்துக்கொண்டி ருக்கிறார்.

**எபிரெயர் 9:12 வெள்ளாட்டுக் கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.**

பாவ மீட்பிற்கு இரத்தம் சிந்தப் பட வேண்டும் என்பது நியதி. இன்று அனேகர் தங்கள் பாவ மீட்பிற்காக மிருகங்களுடைய இரத்தத்தையும், தங்களுடைய இரத்தத்தையும் சிந்தி, தங்களை வருத்தி, அனேக புனித தீர்த்தக்கரைகளுக்கு ஏறி இறங்கி, பல படிகளில் ஏறி யாத்திரை சென்றாவது மீட்பை பெற்றுவிடலாம் என்று பல முயற்சிகள் மேற்கொள்கின்றார்கள். ஆனால் அவைகள் ஒன்றும் ஒரு போதும் பயன்தரப்போவதில்லை. மாறாக மீட்பு தேவனுடையது. அவரு டைய சிந்தப்பட்ட குற்றமற்ற மாசற்ற இரத்தத்தை நோக்கிப்பார்த்தால் மட்டுமே மீட்பு. அவர் ஒருவரே உலக மீட்பர்.

காலத்திற்கு காலம் பல்வேறு பட்ட அடிமைத்தனங்கள், நெருக்கடி கள், துன்பங்கள் மற்றும் சிறையிருப் புக்களில் அகப்பட்டு தத்தளித்த தன்னு டைய ஜனங்களை பல மீட்பர்களை அனுப்பி அவர் மீட்டெடுத்தனை வேதாகமத்தில் பல இடங்களில் நாம் காணமுடியும். இவ்விதமாக மனிதர் களை ஆண்டவர் எழுப்பிய போது அனேகர் அவ் மீட்பின் நிலையை ஏற்றுக்கொள்ள சற்று தயக்கம் காட்டினார் கள். அனேகர் நான் எம்மாத்திரம், இது முடியாது என்று ஏற்க மறுத்தார்கள். ஆனால் ஆண்டவர் தயக்கம் காண்பித்த, பயந்த மனிதர்களை தெரிவு செய்து பெரிய மீட்புகளை உண்டுபண்ணிக் கொண்டே வந்தார்.

அதே போல முழு உலகத்திற் கும் மீட்பை கொடுக்க ஒரே கிருபாதார பலியாக அழைக்கப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்து தெய்வத்துவத்தை துறந்து மனிதனாக இறங்கினார். கடைசி மணி நேரத்தில் 100 வீதம் மனிதனாக அவரும் அந்த சூழ்நிலையில் வியாகுலப்பட்டு, அவரு டைய வியர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய் விழுந்தது. இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் என்னைவிட்டு நீங்கட்டும் என்று பிதா வைப் பார்த்து கதறினார். ஆனாலும் மரணத்தை எதிர்கொண்டு மீட்பை பெற்றுக் கொடுத்தார்.

அவர் மரித்த போது சாத்தான் வெற்றி பெற்றுவிட்டேன் என்று முழங்கி னான். ஆனாலும் பலவீனத்தின் நிலமையில் சிலுவை தான் வெற்றியின் சின்னம் என்பது எதிரிக்கு புலப்பட வில்லை. மரணம் அவரை கட்டி வைத்திருக்க முடியவில்லை. பாதாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை அடைத்து வைத்திருக்க முடிய வில்லை. 'நானே உயிர்த்தெழுதலும் மீட்பும்' என்று மரணத்தினின்று எழுந்து முழு உலகத்தையும் சத்துரு வின் வல்லமையிலிருந்து நீங்கலாக்கி மீட்டு எடுத்தார்.

அந்த ஆண்டவரை விசுவா சித்து அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பல வேளை பல சூழ்நிலை களுக்குள் அகப்பட்டு நெருக்கப்பட முடியும். பிசாசு எங்களை அடிமைப் படுத்தி, பாவம், சாபம், பொருளாதார நெருக்கடி, வியாதி, பிரச்சினை போன்ற பலவற்றின் பிடியில் நாமும், தேசமும் முடங்கியிருக்கும் இந்த நேரத்தில் பிறந்திருக்கும் இவ் 2024ஆவது ஆண்டு 'சீயோன் குமாரத்திகளாகிய' மணவாட்டிகளுக்கு 'மீட்பின் ஆண்டாக' அமைவதாக.

**'தேவன் தாமே**
**உங்களை நிறைவாக**
**ஆசீர்வதிப்பாராக'**

# குறுக்கெழுத்துப் போட்டி - 116, வினா விடை - 118

## சரியான விடை எழுதியவர்கள்

**தர்மபுரம்**
01. பி.சுவர்ணன் +
02. ஜா.ஜொலிற்றா வில்மா +
03. வ.வசிகலா*
04. நி.அருட்செல்வி +
05. பி.புகழ்நிலா
06. சி.வளவன் +
07. பி.சுடர்
08. க.கலைச்சுடர்
09. எஸ்.அன்பன் +
10. க.தமிழோவியன்
11. ச.விதுர்சிகா
12. உ.யாபேஸ்
13. ஜா.ஜோன்வெஸ்லி
14. ச.வனிதா

**காரைநகர்**
15. நா.கிறிஸ்தீனா
16. நா.கிருஷன்
17. நா.அன்னாள்

**பாண்டவெட்டை**
18. எம்.ஜெசிந்தா
19. சி.சிவனேஸ்வரன்
20. சி.சுமித்திரா

**யாழ்ப்பாணம்**
21. எஸ்.திஸ்பியா

**திருநெல்வேலி**
22. என்.செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீயோன்

## பெண்கள் ஜெபக்குழு 45 ஆவது ஆண்டு நிறைவு

நன்றி ஆராதனை கடந்த 12.12.2023 அன்று பிரதான ஆலயத்தில் சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனை நன்றியோடு துதிக்கின்றோம்.





## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

### சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வழி தெரியாவிட்டாலும்

**வேதப்பகுதி: சங்கீதம் 1:1-6**

பாபுவுக்கு அது நல்ல பழக்கமான கிராமம். ஆனால் பிரபுவுக்கு அது மிகவும் புதியது. அதுவும் இரவு வேளை. வழி ஒன்றும் கண்ணுக்குத் தெரியாத அளவிற்கு இருள். 'பாபு எங்கும் இருட்டாயிருக்கிறதே. நாம் எப்படி ஊர் போகமுடியும்?' என்றான் பிரபு. 'பிரபு நீ பயப் படாதே, நீ எனக்கு பின்னாலே வந்து கொண்டிரு. நாம் சீக்கிரம் ஊருக்குப் போய் விடுவோம்' என்றான். அப்படியே அந்த இருள் நடுவில் பாபுவைப் பின்தொடர்ந்தான் பிரபு. பாபு மிக அருமையாக அவனை ஊருக்கு அழைத்துச் சென்றான்.

சில நேரங்களில் நமக்கு எதை எப்படிச் செய்வது என்று தெரியாமல் போய்விடுவதுண்டு. வழிகள் ஒன்றும் நமக்கு புலப்படாது. ஆனால் இயேசு எல்லாவற்றையும் அறிவார். நாம் அவரைச் சரியாகப் பின்பற்ற வேண்டும். அப்போது அவர் நம்மை சரியாக வழிநடத்திச் செல்வார்.

**சிந்தனைக்கு:-**

எங்கும் இருட்டாயிருப்பது போல நமக்கு கஷ்டங்கள் வரலாம். ஆனாலும் கர்த்தரை பின்பற்றி வாழ்ந்தால் அவர் நம்மை நடத்துவார்.

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – ஜூன் 19



To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் தொ.பே: 0772002351

noolaham.org | aavanaham.org